உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவம்


| | | |
|---|---|---|
| மலர் 1.] | இராக்ஷச௵ கார்த்திகை௴<br>1915௵ நவம்பர்௴ | [இதழ் 11. |


## திருவாசகம்.

*திருச்சிற்றம்பலம்.*

*ஆமாறுன் றிருவடிக்கே யகங்குழையே னன்புருகேன்*
*பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்*
*கோமானின் றிருக்கோயி றூகேன் மெழுகேன் கூத்தாடேன்*
*சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே.*

## தாருகவன முனிவர் சரித்திரம்.

(175 - வது பக்கத்தொடர்ச்சி.)

சிவபெருமான் அவ்வாறு செல்லுதலும், மாதுருவங்கொண்ட மாயனார், முனிவர்களியாவரும் காமவிகாரங்கொண்டு தம்மைத் தொடர்ந்துவர, அவரைச்சந்தித்தனர். இவ்வாறு சிவபெருமானும் திருமாலும் சந்தித்தமை கங்கையும் யமுனையும் கலந்ததுபோலிருந்தது. சிவபெருமானுடைய திருமேனியைத் தரிசிக்க அம்முனிவர்களுக்குப் புண்ணியமில்லாமையால், இறைவனார் தாம்கொண்டிருந்த திருவுருவத்தை மறைத்து அவர்களுக்கு வேறொருவடிவத்துடன் தோன்றினார். அவர்கள் அவ்வாறு தோன்றிய இறைவனாரையும் அவரைப் பின்தொடர்ந்துசென்ற தங்கள் மனைவிமார்களையுங்கண்டு, அடங்காதவதிசயமும் நாணமுங்கொண்டு, "ஐயையோ, இவர்களும் நம்மைப்போலவே காமவிகாரங்கொண்டு, நாணமும் கற்பு நிலையும் நீங்கி இவனைப் பின்தொடர்ந்து வந்தார்கள்போலும்" என்று சொல்லிக்கொண்டு, மோகினிபால் வைத்த மையலைச் சற்றேறயடக்கிக் கொண்டு, மானமீதூர வருந்தி ஏங்கி "இவள் யாரோ ஒருத்தி வந்து நம்மை மயக்கித் தன்னிடத்தில் மோகமுண்டாகும்படிச்

செய்து, நாம் நெடுங்காலமாகச் செய்துகொண்டுவந்த அரியதவங்களையெல்லாம் அழித்துப் பாழாக்கினாள். இவன் யாரோவொருவன்வந்து நம்முடைய மனைவியரின் சிறந்த கற்புநிலையையழித்தான். ஐயையோ, இதென்னமாயம்!" என்றுசொல்லிக்கொண்டு இவ்வாறு செய்தவர்கள் யாவராயிருக்கலாமென்று யாவருங்கூடி யாலோசித்து "இம்மாதரின் கற்பினையழித்தவன் கைலையில்வசிக்குங் கங்காளனேயாவன். நம்முடைய தவத்தையழித்தவன் மண்ணைத்தின்ற மாயனேயாவன். இவ்விருவருள் மாயவன் தானே தன்னிச்சையின்படி நம்மிடம் வந்திருக்கமாட்டான். இவன் அந்தச் சிவன்பேச்சைக் கேட்டுக்கொண்டுவந்து இவ்வாறுசெய்தான். ஆனாலும், இவன்செய்தது நமக்கு ஒருபொருளல்ல. இவனால் நம்முடைய தவங்கள் அழிந்துபோனாலும் பெரிதல்ல. அதற்குப் பிராயச்சித்தஞ்செய்துகொண்டு, மறுபடியும் தவஞ்செய்யலாம். சிவன்செய்ததுதான் கொடிய அக்கிரமம். அவன் பிச்சையெடுப்பவன்போல் வந்து ஒன்றும்தெரியாத பேதைகளாகிய நம்முடைய மனைவியரைக் கெடுத்துவிட்டான். ஒருமுறையழிந்தகற்பு மீண்டும் வரப்போவதில்லை. இதனால் நமக்கு எக்காலத்தும் நீங்காத அபகீர்த்தியுண்டாய்விட்டது," என்று சொல்லிக்கொண்டு, மானத்தால் உயிர்நீங்கினாரை யொத்துக் கோபாவேசங்கொண்டு, தங்கள் மனைவிமார்களைப்பார்த்து, "ஓ, ஓ, பேதைமார்களே, ஆடையவிழவும் ஆபரணங்கழலவும் காமவிகாரங்கொண்டு நாணமின்றிக் கற்பிழந்து எவன் பின்னே போகின்றீர்கள்? நீங்கள் இனி உயிர் வாழ்தலினும் சாதலேநன்று. திரும்பி உங்கள் வீடுகளுக்குப்போய்ச் சேருங்கள் என்றார்கள்". முனிபன்னியர்கள் தங்கள் கணவன்மார் இவ்வாறு கூறியதைக்கேட்டு "இவரைத்தரிசித்தவர்கள் இறவாத இன்பக்கடலில் மூழ்குவதன்றி இறந்துபோவது முண்டோ! இம்முனிவர்கள் பித்தர்கள்போலும்!" என்று சொல்லிக்கொண்டு பிச்சாடனமூர்த்தியின் திருவுருவம் பதிந்த மனத்தினராய், அப்பிரானார் திருவருளினால் திரும்பிப்போய் தங்கள் வீடுகளை யடைந்தார்கள். அப்போது மோகினிவடிவங்கொண்ட திருமால் சிவபெருமான் திருவருளால் அவ்வடிவத்தைமாற்றி ஆணுருக்கொண்டு நின்றனர். இத்திருவிளையாடலைக்கண்டு களித்துய்யுமாறு பிரமாதிதேவர்களியாவரும் வந்து கூடினார்கள். அப்போது அம்முனிவர்கள் ஆதிமத்தியாந்த ரகிதராகிய அண்ணலாரை மிகவும் கோபித்துப்பார்த்து அவரைக்கொல்ல நிச்சயித்து ஒருகொடிய யாகத்தைச்செய்தார்கள். அப்போது அவ்வேள்வித் தீயினின்றும்

மிக்வும் கோபாவேசத்தோடு ஒருபுலி தோன்றியது. முனிவர்கள் அப்புலியைப்பார்த்து “நீ சிவனைக்கொல்வாயாக” என்று வணங்கி விடுப்ப அது விரைந்து இறைவனாரையடைதலும், இறைவனார் அதனைக்கொன்றுரித்து அதின்தோலை ஆடையாக உடுத்தனர்.

அதன்பின்னர் அம்முனிவர்கள் அவ்வேள்வித்தீயினின்றும் ஒன்றின்பின்னொன்றாகத் தோன்றிய மழு, மான், பாம்புகள், பூதகணங்கள், நகுவெண்டலை, மந்திரரூபமாகிய உடுக்கை, முயலகன், ஆகிய இவைகளையும் கடைசியாக அவ்வேள்வித் தீயையும் சிவபெருமானைக் கொல்ல ஏவினார்கள். இவைகள் ஒவ்வொன்றும் உலகடங்கலும் அழியும்படியான ஆரவாரங்களோடும் தனித்தனி ஒன்றின்பின்னொன்றாகச் சிவபிரானை யணுகியமாத்திரத்தில், பிரானார் மழுவைத் தமது ஆயுதமாக வோர் அங்கையிற்பற்றினர். மானையும் அவ்வாறே ஓர் மலர்க்கையிலேந்தினர். அரவங்களை ஆபரணமாகவணிந்தனர். பூதகணங்களைத் தமது புனிதசேனைகளாக்கிக் கொண்டனர். வெண்டலையைத் தமது வேணியிலணிந்தனர். மந்திரஉடுக்கையை யோர் மலர்க்கையிற் பற்றினர். வேள்வித்தீயைக் கையிலேந்தி முயலகனென்னும் பூதத்தினைத் தமது பாதபங்கயத்தாற் கீழே தள்ளி அவ்வடிக்கமலத்தினை அவன் முதுகில் ஊன்றிநின்றனர். தாங்கள் செய்தனவெல்லாம் பயனற்றழியவே அம்முனிவர்கள் சங்காரகர்த்தாவாகிய சங்கரனார் அழிந்துபோகும்படி அளவற்ற சாபங்கூறினர். அச்சாபமனைத்தும் யாதும் செய்யமாட்டாமல் ஊழித்தீமீது செல்லும்பஞ்சுபோல் உடனே பாழாயின. இறைவனார் தமது திருவடியால் ஊன்றிய முயலகன் மெல்ல மெல்ல உடலைத்தூக்கித்தூக்கி அசைதலும், சிதாகாசத்தின்கண்ணே என்றும் நீங்காமல் ஆனந்தநிருத்தஞ்செய்வதுபோல அவன்முதுகொடிய நடித்தருளினார். எல்லாம் தாமேயாயிருக்கும் இறைவனார் அவ்வாறு தாண்டவம்புரிதலும் சராசரங்களியாவும் நடுங்கின. வேள்விசெய்து பாவத்தைவிளைக்கும் அம்முனிவர்கள் நடுங்கிவிலகினார்கள். பிரமனும் திருமாலும்அந்தநடனத்தைத் தரிசித்து மனமகிழ்ந்து தோத்திரஞ்செய்துகொண்டு அருகில் நின்றார்கள். இந்திரன் முதலிய தேவர்களும் பயந்துநின்றனர். உலகடங்கலும் தமது திருநடனத்தால் அயர்ந்து வீழ்ந்தமையை முதல்வனார் உணர்ந்து திருநடமியற்றாது நிற்ப, தேவர்கள் முதலியோர் அன்போடு எழுந்துவணங்கினர். இறைவனார் அம்முனிவர்களுக்கு நல்லுணர்ச்சியைக் கொடுத்தலும் அவர்களும் விரைந்தெழுந்து பெருமானை வணங்கித் தாங்கள் செய்த பிழைகளைப்பொறுத்தருளு

மாறு துதித்தனர். விருப்பு வெறுப்பில்லாத விமலனார் அவர்களைப் பார்த்து "நீங்கள் பாவச்செயல்களை விடுத்து யாம் கூறியுள்ள வேதாகமவிதிகளை யனுசரித்து, எம்மிடத்தில் அன்பு பூண்டு சிறந்த தவத்தினைச் செய்யுங்கள்" என்று கட்டளையிட்டருளி அவர்களையவ்வனத்திலிருக்கச்செய்து விஷ்ணுமுதலிய தேவர்களை அவரவரிடங்களுக்குச்செல்ல ஏவி திருக்கைலையை யடைந்து உமாதேவியாரோடு வீற்றிருந்தருளினார்.

இச்சரித்திரத்தால் சிவபெருமானை வணங்காதார் எவ்வளவு தவம் முதலிய சற்கருமங்களைச் செய்தாலும் அவற்றால் யாதொருபயனையுமடையமாட்டார்களென்பதும், அவர்கள் செய்யும் அறச்செயல்களும்பாவச்செயல்களாய்முடியும் என்பதும், உயிர்களுக்குவினைப்பயன்களையூட்டுவிப்பார் சிவபெருமானே யென்பதும், அவரன்றியோரணுவும் அசையாதென்பதும், அவரை வணங்குவார்க்கே ஆக்கமும் வணங்காதார்க்குக்கேடும் உண்டாகும் என்பதும், அவர்புலித்தோல், மழு, மான், அரவம், பூதசேனை, நகுவெண்டலை, உடுக்கை, முயலகன், அனல் ஆகிய இவைகளையுடையவராயிருத்தற்குக் காரணமும் உணரலாகும். இவைகளையறிவித்தற்கே சிவாலயங்கடோறும் பிட்சாடனர் மகோற்சவம் நடத்தப்படுகின்றது.

**தேவாரம்.**

படுவிப்பா யுனக்கேயாள் பலரையும் பணியாமே
தொடுவிப்பாய் துகிலொடுபொன் றோலுடுத் துழல்வானே
கெடுவிப்பா யல்லாதார் கேடிலாப் பொன்னடிக்கே
விடுவிப்பாய் குறுகாவூர் வெள்ளடை நீயன்றே.

---

## மெய்யுணர்வு.

**திருவாசகம்.**

பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே யெனக்கருதிப்
பேய்த்தேர் முகக்குறும் பேதைகுண மாகாமே
தீர்த்தாய் திகழ்தில்லை யம்பலத்தே திருநடஞ்செய்
கூத்தாவுன் சேவடி கூடும்வண்ணந் தோணோக்கம்.

மெய், வாய்மை, உண்மை, சத்து என்பன ஒருபொருட் சொற்கள். உணர்வு, அறிவு, போதம், ஞானம், சித்து என்பன ஒருபொருட்சொற்கள். மெய்யுணர்வு என்னுஞ் சொற்றொடர் மெய்ப்பொருளை யறியும் அறிவு என்று பொருள்படும். மெய்ப்பொருளை யறி

யும் அறிவு எனவே, மெய்ப்பொருள் ஒன்றும், பொய்ப்பொருள் ஒன்றும், இவைகளையறியும் அறிவுப்பொருள் ஒன்றும் ஆக மூன்று பொருள்கள் உண்டென்பது பெறப்படும். இவற்றுள் மெய்ப்பொருள் பதி அல்லது சிவம் எனவும், பொய்ப்பொருள் பாசம் எனவும், அறிவுப்பொருள் பசு அல்லது ஆன்மா எனவும் சொல்லப்படும். பதிப் பொருள் எக்காலத்தும் தோற்றக் கேடுகளின்றி நிர்விகாரமாயிருப்பதொன்றாகலின் அது வொன்றே மெய்ப்பொருள் எனவும், அதனையறியும் அறிவே மெய்யறிவு, அல்லது மெய்யுணர்வு, அல்லது சிவஞானம் எனவும் சொல்லப்படும். பாசமும் பசுவும் பதியைப்போலவே அநாதி நித்தியப்பொருள்களாயிருக்க, அவைகளும் ஏன் மெய்ப் பொருள்களாகாவெனில், பாசமானது சடப்பொருளாயிருத்தலானும், தனுகரணபுவனபோகங்களாகக் காரியப்பட்டு விகாரங்கள் மருவுதலானும், முத்தியிலும்ஆன்மபோத நீக்கத்திலும் தன்வலிகெட்டு நிற்றலானும், சர்வசங்காரகாலத்திற் சிவசத்தியில் ஒடுக்கமுறலானும், அது மெய்ப்பொருளாகாமல் கனவும்கானற்சலமும்போன்ற பொய்ப்பொருளேயாமென்க. ஆன்மா சார்ந்ததன் வண்ணமாயிருந்துகொண்டு, கேவலாவத்தையில் ஆணவம் வேறு தான் வேறு என்னுதபடி அவ்வாணவமலமேயாயிருத்தலானும், சகலாவத்தையில் பிறப்பிறப்புகளால் விகாரமெய்துதலானும், சுத்தாவத்தையில் ஆன்மபோதம் நசித்துச் சிவமேயாய் விடுதலானும், சர்வசங்காரகாலத்தில் சர்வான்மாக்களும் சிவத்திலொடுங்கச்சிவம் ஒன்றேசேட்டித்திருத்தலானும், ஆன்மாவும் மெய்ப்பொருளென்று சொல்லப்படாமல் சிவமொன்றே மெய்ப்பொருளென நாட்டப்படுமென்க. ஆதலால், இத்தகைய சிவபரம்பொருளையறியும் அறிவே மெய்யுணர்வு என்றுசொல்லப்படும். இதனைத் திருவள்ளுவதேவர் தாம் கூறியருளிய பொதுவேதமாகிய திருக்குறளில், மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தில்,

> பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
> செம்பொருள் காண்பதறிவு.

என விளங்க உரைத்தனர். இதில் "செம்பொருள்" என்றது சிவபரம்பொருளை. இதனைச் சிறப்புவேதமாகிய தமிழ்வேதம் "செம்பொருட்டுணிவே," "செம்மையேயாய சிவபதமளித்த செல்வமே," "செம்மைதருசத்தி முற்றத்துறையுஞ் சிவக்கொழுந்தே," "செம்மை பெறவெடுத்த திருத்தோடுடைய செவியனு, மெய்ம்மைமொழித் திருப்பதிகம்" என்றருளிச்செய்ததனுல் உணர்க.

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களுள், பதியும் பசுவும்

(அறிவுடைய) சித்துப்பொருள்களாம். பாசம் (அறிவில்லாத்) அசித்துப் பொருளாம். அறிவுடைப்பொருள்களாகிய சித்துப் பொருள்கள் இரண்டினுள் பதி அறிவிக்கும் சித்தும், பசு அறியுஞ் சித்துமாம். பதியறிவித்தாலன்றி பசு எதையும் தானே யறியமாட்டாது. இது பற்றியே தமிழ்வேதம் "காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே" என்றருளிச்செய்தது. ஆன்மா அறிவுப் பொருளாயிருக்க, அது ஏன் தானே எதையும் அறியாது என்னில், அது பதியைப் போல் பேரறிவாயிராமல், ஆணவமலத்தால் மறைப்புண்டு சிற்றறிவாயிருத்தலாலென்க. ஆன்ம அறிவு கண்ணொளியைப்போன்றது. பதியறிவு சூரியன் ஒளியைபோன்றது. கண்ணுக்கு இயற்கையாகவே ஒளியிருந்தும் அது சூரியனொளியின் உதவியின்றி எதையுங் காணாது. அதுபோல் ஆன்மா சிவம் அறிவித்தாலன்றி எதையும் தானே யறியாது. அன்றியும், படலத்தால் மறைப்புண்ட கண்ணானது சூரியனொளியிருந்தும் எதையுங் காணமாட்டாது. அதுபோல் ஆணவமென்னும் படலத்தால் மறைப்புண்டிருக்கும் ஆன்மா, தன்னுடன் சிவம் அத்துவிதமாகக் கலந்திருந்தாலும், தன்னையும் தன் தலைவராகிய சிவபெருமானையும் அறியமாட்டாமல், கனவையும் கானற்சலத்தையும் போன்ற பொய்ப்பொருள்களாகிய தனுகரண புவனபோகங்களைத் தானெனவுந் தனதெனவும், தலைவனார் செயலைத் தன் செயலெனவும் மயங்கி மதித்து, அவைகளையேபெரும் பற்றுகப் பற்றி, அப்பற்றுகாரணமாக வினைகளையீட்டி, அவ்வினை காரணமாகப் பிறந்து பிறந்துழலும்.

**திருவுந்தியார்.**

> காயத்துண் மெய்ஞ்ஞானக் கள்ளுண்ண மாட்டாதே
> மாயக்கள் ளுண்டாரென் றுந்தீபற
> வறட்டுப் பசுக்களென் றுந்தீபற.

ஆன்மகோடிகள் இவ்வாறு "பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே யெனக்கருதிப் பேய்த்தேர் முகக்குறும் பேதைகுணம்" மேலிட்டுத் துயர்கூர்ந்திருத்தலை யுணர்ந்த பரம கருணாநிதியாகிய இறைவனார், அவைகள் மீது பெருங்கருணைகூர்ந்து அவ்வாணவ மலத்தின் வலியையடக்கி அவைகளைத் தமது பரமானந்தப் பதமலர் நீழலிற் சேர்க்கத் திருவுளங்கொண்டு, அழுக்கைக்கொண்டு அழுக்கையொழிப்பதுபோல், அவைகளின் வினைக்கீடாகப் பலவகைப்பட்ட பிறவிகளைக்கொடுத்து, வினைப்பயன்களை யுண்பித்து, இருவினை யொப்பும் மலபரிபாகமும் சத்திநிபாதமும் உண்டாகும் சமயம்

பார்த்து, ஞானசிரியராயெழுந்தருளி, ஞானதீக்கைசெய்து, ஆணவமான படலத்தைப்போக்கி, மெய்ஞ்ஞானக்கண்ணைக் கொடுத்தருளுவர். அப்போது அதுவரையில் பொருளல்லவற்றைப் பொருளென்று மருண்டு துன்பக்கடலில் வீழ்ந்துகிடந்த ஆன்மாக்கள், அவைகளைப் பொய்யெனக் கண்டுநீங்கி, மெய்ப்பொருளாகிய சிவத்தை யுணர்ந்து அதனோடு இரண்டறக்கூடி இன்பமார்ந்திருக்கும்.

ஆணவமலம் சிவபெருமானார் ஞானசிரியரா யெழுந்தருளி வந்து போக்கினாலன்றி, எக்காலத்தும் வேறெவ்வழியாலும்நீங்காது.

### திருவிளையாடற்புராணம்.

கரவிலாதபே ரன்பினுக் கெளிவருங் கருணைக்
குரவனாரு ளன்றியிக் கொடிய வெம்பாசம்
புரையில் கேள்வியாற் கழிப்பது புணையினாலன்றி
யுரவு நீர்க்கடல் கரங்கொடு நீந்துவ தொக்கும்.

### திருக்களிற்றுப்படியார்.

ஆகமங்க ளெங்கே யறுசமயந் தானெங்கே
யோகங்க ளெங்கே யுணர்வெங்கே—பாகத்
தருள் வடிவுந் தானுமா யாண்டிலனே லந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு.

### திருவாசகம்.

நானுமென் சிந்தையு நாயகனுக் கெவ்விடத்தோம்
தானுந்தன் றையலுந் தாழ்சடையோ னாண்டிலனேல்
வானுந் திசைகளு மாகடலு மாயபிரான்
றேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

சத்திநிபாதம் என்பதற்குச் சத்தியின் வீழ்ச்சி என்பது பொருள். "காகமானது கோடி கூடுகின்றூறு மொருகல்லின் முன்னெதிர் நிற்குமோ" என்றவாறு, பலகாக்கைகள் கூடியிருந்தவிடத்தில் ஒரு கல் வந்து விழுமானால், அவ்வீழ்ச்சியானது அவ்விடத்திற் கூடியிருந்த காக்கைகளை யெல்லாம் அவ்விடத்தினின்றும் ஓட்டுவதுபோல், ஆன்மாவிடத்திற் சத்திநிபாதம் நிகழ்ந்தபோதே அதைப்பற்றிக்கொண்டிருந்த மனைவிமக்கள் மாடு வீடு என்பனவாதியாகிய பற்றுகளெல்லாம் பற்றறவொழிந்து, ஆன்மா பிரபஞ்சவாழ்க்கைக்குப் பயந்து மெய்யுணர்வை நாடி ஞானசிரியனைத் தேடிச் செல்லும். அவ்வான்மாவுக்கு வினைப்பயன்களை மறைத்து நின்றாட்டிக்கொண்டு மறக்கருணை வடிவமாயிருந்த திரோதான சத்தியானது மலபரிபாகம் வரும்போது அறக்கருணை ரூபமாகிய

அருட்சத்தியாய் மாறிவிடும். அது அவ்வாறு மாறுதலே சத்திநிபாதமாகும். அவ்வருட்சத்தியையே சிவபெருமான் திருமேனியாகக் கொண்டு ஞானாசிரியராயெழுந்தருளுவர். இச்சத்திநிபாதம் மலபரிபாகத்தால் உண்டாகும்.

மலபரிபாகம் என்பது மலம் தனது வலிகெடுதற்குரிய துணைக் காரணங்களெல்லாவற்றோடுங் கூடுதலாம். மலபரிபாகம் இருவினையொப்பால் உண்டாகும்.

இருவினையொப்பாவது நல்வினைப் பயனாகிய இன்பத்தில் விருப்பும், தீவினைப்பயனாகிய துன்பத்தில் வெறுப்புமின்றி, அவ்விரண்டையும் சிவனருளிச்செய்தது என்று சமமாகக்கண்டு அனுபவித்தலாம். இருவினையொப்பு வரப்பெற்றவர்கள் இன்பம் வந்தகாலத்தில் அவ்வின்பத்திலழுந்தி மகிழார். ஆதலால் அவர்கள் துன்பம் வந்த காலத்தில் அத்துன்பத்தால் துயருறார்.

**திருக்குறள்.**

**இன்பத்து ளின்பம் விழையாதான் றுன்பத்துட்**
**டுன்ப முறுத லிலன்.**

இருவினையொப்பும் மலபரிபாகமும் இம்மை மறுமைப்பயன்களை யெதிர்நோக்காமல் வெறும் அன்புகாரணமாகச் செய்யும் சிவபத்தியால் உண்டாகும். சிவபத்தி, குருலிங்கசங்கமம் என்னும் மூன்றிடத்தும், சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நால்வழியாற் செய்யப்படும்.

**பெரிய புராணம்.**

கேடு மாக்கமுங் கெட்ட திருவினர்
ஓடுஞ் செம்பொனு மொக்கவே நோக்குவார்
கூடு மன்பினிற் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.

சரியையின் முதிர்ச்சியில் கிரியையும், கிரியையின் முதிர்ச்சியில் யோகமும், யோகத்தின் முதிர்ச்சியில் ஞானமுமுண்டாம். சரியையில் கால்மலம் கழியும். கிரியையில் அரைமலம் அழியும். யோகத்தில் முக்கால்மலம்போம். ஞானத்தில் முழுமலம் போம்.

**பதி பசு பாச விளக்கம்.**

சரிதையி லாணவங் கால்ச ரிந்திடுங்
கிரியையி லரைமலங் கெடுதி யுற்றிடும்
மருவுயோ கத்தின்முக் கான்ம டிந்திடும்
விரிசிவ ஞானத்தில் முற்றும் வீயுமே.

சிவபத்தி புண்ணியமேலீட்டினுல் உண்டாகும். பாவந்தேய்த லால் புண்ணியமேலிடும். ஆதலால் மெய்யுணர்வடையவேண்டுவோர் தீவினைகளைச் செய்யலாகாது. நல்வினைகளையே செய்தல்வேண்டும். இப்படி ஒழுகுவாராயின் அல்லனதேய அறம்பெருகும். அருளும் உண்டாகும்.

**தாயுமானசுவாமிகள் பாடல்.**

குற்றங் குறையக் குணமே லிடவருளை
யுற்றவரே யாவிக் குறவாம் பராபரமே.

இதுவரையிற் கூறியவாற்றுல் பாவம் தேயப் புண்ணியம் வளரும் என்பதும், புண்ணியம் மேலிடச் சிவபத்தியுண்டாகும் என்பதும், உண்மைச்சிவபத்தியால் ஐம்புலனடங்கி அவாவொழிந்து இருவினையொப்பும் மலபரிபாகமும் உண்டாகும் என்பதும், மலபரிபாகத்தால் சத்திநிபாதம் உண்டாகும் என்பதும், சத்திநிபாதம் உண்டாகும்போது சிவபெருமான் ஞாஞசிரியராயெழுந்தருளிச் சீவபோதத்தை நீக்கிச் சிவஞானமாகிய மெய்யுணர்வைத்தந்து தன்னுடன் இரண்டறக்கூட்டி இன்பமார்ந்திருக்கச்செய்வர் என்பதும் விளங்கும்.

இத்தகைய மெய்யுணர்வு உண்டாதற்பொருட்டே, சிவபெருமான் ஆன்மாக்களுக்குப் பெறுதற்கரிய மானிடப்பிறவியைக் கொடுப்பதும், பஞ்சகிருத்தியம் செய்வதும், வேதாகமங்களை யருளிச்செய்ததும். ஆதலால் அவரை வழிபடப்பெற்றவரே மானிடப்பிறவியாலாய பயனைப்பெற்றவராவர். அவரை வழிபடாதவர்பெறுதற்கரிய வப்பேற்றையிழந்தவராவர்.

**திருமந்திரம்.**

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணுர்
பெறுதற் கரிய பிராணிக ளெல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே.

**பதிபசுபாச விளக்கம்.**

மருவிய வுடல்வெ றுப்பும் வையக வெறுப்பும் வந்தால்
இருவினை யொப்பு மங்க ணெய்திடு மெய்துங் காலை
கருமல பாக முண்டாம் பாகத்தாற் கடிதிற் சேரும்
திருவருட் சத்தி பாதஞ் செறிந்திடுங் குருவு மன்றே.

காணுறு புலன்கள் போகிற் கரிசுறு மலம்போம் போனு
லாணவம் போகும் போனு லாருயிர்ப் போதம் போகுஞ்

எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(இ - ள்.) யாதொருபொருள் யாதோரியல்புடையதாய்த் தோன்றினும் அதைத்தோன்றிய விதமாகவே காணுமல் அப்பொருளிடத்திருந்தும் மெய்யாகிய பொருளைக்காண்பது மெய்யறிவாகும்.

இதனுல், பலவகைப்பட விரிந்து கிடக்கும் பிரபஞ்சமாகிய பொய்ப்பொருளை அவ்வவ்வகைப்பொருள்களாகக் காணுமல் அவையனைத்தையும் சிவமாகக்காணுதல் அறிவு என்பதும், இவ்வாறு காணுதவர்கள் எவ்வளவு அறிவுடையவராகக் காணப்பட்டாலும் அவர்களறிவு மெய்யறிவு அன்று என்பதும் பெறப்படும்.

திருத்தாண்டகம்.

இருநிலனுய்த் தீயாகி நீரு மாகி யியமானனு யெறியுங் காற்று மாகி
யருநிலைய திங்களாய் ஞாயி ருகி யாகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணு மாணும் பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையா யின்ருகி நாளையாகி நிமிர்புன் சடையடிக ணின்ற வாறே.

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

(இ - ள்.) இப்பிறவியிலே ஞானுசிரியன்பால் ஞான நூல்களை ஓதி யுணர்ந்தவர்கள் திரும்பி இப்பிறவியினிடத்து வாராதவழியை யடைவார் (எ - று.)

தமிழ்வேதம் "கற்றவர்களுண்ணுங்கனி" யெனவும், "கற்றவர் விழுங்குங் கற்பகக்கனியை மற்றவரறியா மாணிக்கமலையை" எனவும், "கல்லாநெஞ்சில் நில்லானீசன்" எனவும், "கற்றல் கேட்டலுடையார் பெரியார் கழல்கையாற் ருெழுதேத்தப் பெற்ற மூர்ந்த பிரமாபுரமேவிய பெம்மான்" எனவுங் கூறுமாறு, மெய்யுணர்வு பெறவேண்டுவோர் ஞானுசிரியன்பால் ஞானநூல்களை ஓதி அவன் உபதேசமொழிகளைக் கேட்டு அவ்வழி நிற்றல் வேண்டுமென்பதை விளக்கியவாறும்

ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

(இ - ள்.) ஆசிரியனிடம் கேட்ட உபதேசப்பொருள்களை ஒருவனது உள்ளமானது நிச்சயப்பட பிரமாணங்களாலும் யுத்தியினுலும் ஆராய்ந்து, உள்பொருளாகிய மெய்ப்பொருளை அறியுமாயின் அவனுக்கு மறுபடியும் பிறவியுண்டாகுமென்று எண்ணவேண்டுவதில்லை (எ - று.)

திருவாசகம்.

கரணங்க ளெல்லாங் கடந்துநின்ற கறைமிடற்றன்
சரணங்களே சென்று சார்தலுமே தானெனக்கு
மரணம் பிறப்பென் றிவையிரண்டின் மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு.

(இ - ள்.) பிறவிக்குக் காரண மெனப்படுகிற அஞ்ஞானமானது நீங்க மோக்ஷத்திற்குக் காரணமாகிய உண்மைப் பொருளைக் காண்பது மெய்யுணர்வாம் (எ - று.)

சார்புணர்ந்து சார்புகெட வொழுகின்மற் றழித்துச்
சார்தரா சார்தரு நோய்.

(இ - ள்.) ஒருவன் எல்லாப் பொருள்களுக்குஞ் சார்பாகிய (சிவபரம்)பொருளை யுணர்ந்து இருவகைப் பற்றுகளுங்கெட வொழுகுவானாயின், முன் அவனைச் சேர்தற்குரியனவாயிருந்த துன்பங்கள் அவ்வுணர்வையும் ஒழுக்கத்தையும் அழித்துப்பின் சேரமாட்டாவாம் (எ - று.)

பிரபஞ்சம் பொய்யெனக்கண்டு இருவகைப்பற்றையும்விட்டு நீங்கிச் சிவனையுணர்ந்து மெய்ஞ்ஞான நிட்டைமேவும் சீவன் முத்தர்களுக்கு மறுபடியும் பிரபஞ்சப்பற்றும் உலோகாசாரமும் இவைகளாலுண்டாகும் துன்பமும் உண்டாகா வென்பதாம்.

திருவாசகம்.

அவமாய தேவ ரவகதியி லழுந்தாமே
பவமாயங் காத்தென்னை யாண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலு நாமொழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
னாமங் கெடக்கெடு நோய்.

(இ - ள்.) விருப்பு, வெறுப்பு, அஞ்ஞானம் எனப்படும் இம் மூன்று குற்றங்களின் பெயரும் கெடுதலால் அவைகளின் காரியங்களென்னும் வினைப்பயன்களாகிய துன்பங்கள் உண்டாதலில்லை (எ-று.)

சிவஞானிகளுக்கு விருப்பு வெறுப்பும் அஞ்ஞானமும் இல்லையாகையால் அவர்களுக்கு வினைப்பயனாகவரும் துன்பமும் இல்லையென்பதாம்.

“மருவிய பொறியி லொன்று மாபூத மைந்தி லொன்றுங், கருவிக ணான்கு நீங்காக் கலாதிக ளைந்துங் கூடி, யொருபுல னுகருமிந்த வொழுங்கொழிந் துயிரு மொன்றைத், தெரிவுறு தவனொ ழிந்தத் திரள்களுஞ்செயலி லாவே” என்னுந் திருவாக்கானும் அறிக. எழுத்துக்களோடு விரவிநிற்றலால் அகரத்திற்கு விகாரமின்மையை “மெய்யோடியையினு முயிரியறிரியா” என்னுஞ் சூத்திரத்தானும், உலகத்தோடு விரவி நிற்றலால் முதல்வற்கு விகாரமின்மையை “பரனுயிருணர்வொடுபாச பேதமும், விரவுறு தெங்கனு மேவு முண்மையே” என்னுந் திருவாக்கானும் அறிக.

விகாரத்தாற்பிறத்தலாவது,—விந்துவின் காரியமாகிய நாதம் பிராணவுதானங்களின் தொழிற்பாட்டால் உரங்கண்டமுச்சிமூக்கென்னும் இடங்களை யுற்று இதழ்நாப்பல்அண்ணங்களிற் பட்டுச் சிதறுண்டு வெவ்வேறெழுத்தாகிய ஒலியாய்ப் பிறத்தலாம்.

இயல்பாற்பிறத்தலாவது,—விந்துவின் காரியமாகிய நாதம் பிராணவுதானங்களின் தொழிற்பாட்டால் அங்காந்தமாத்திரத்தில் தன்னியல்பின் மாறுபடாது பிறத்தலாம்.

நாதம் = சுத்தமாயாவிருத்தியாகிய பரசரீரத்தினின்றுந் தோன்றிய வியஞ்சகவொலி.

செயற்கையுணர்வாவது,—அநாதிபெத்தசித்துத் தன்மையால் வியஞ்சகமுள்வழி அதுவதுவாய் ஏகதேசமாத்திரையின் உணருமுணர்வாம்.

இயற்கையுணர்வாவது,—அநாதி முத்தசித்துத் தன்மையால் எவற்றையும் ஒருங்கே ஓரியைபான் உணருமுணர்வாம்.

அகரம் கலப்பினா லெழுத்தெல்லாமாகவும், பொருண்மையால் வேறாகவும், ஏனையவெழுத்துக்கட்குயிராதற்றன்மையால் உடனாகவும் நிற்கும். இதனை “அகரவுயி ரெழுத்தனைத்து மாகி வேறா யமர்ந்ததென” என்னுந் திருவாக்கான் அறியலாம்.

முதல்வன் கலப்பினா லுலகெல்லாமாகவும், பொருண்மையால் வேறாகவும், உயிர்க்குயிராதற்றன்மையால் உடனாகவும் நிற்பன். இதனை, “ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம,” “ஏகமேவாத்விதீயம் ப்ரஹ்ம” என்னும் இத்தொடக்கத்தனவாகிய சுருதிகளானும், “அவையேதானேயாய்,” “உலகெலாமாகி வேறாயுடனுமாய்,” “உடலுயிர்கண்ணருக்கனறிவொளிபோல்” என்னும் இவைமுதலிய திருவாக்குக்களானும் அறியலாம்.

(இன்னும் வரும்.)

பா. கங்காதரதேவர்,
ஆயுர்வேதபண்டிதர்.